සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය
நலன்புரி நன்மைகள் சபை
WELFARE BENEFITS BOARD
මුදල්, ආර්ථික ස්ථායීකරණ හා ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
Ministry of Finance, Economic Stabilaization & National Policies
මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය எனது இல My No. | WBB/02/Notice/D/Div/2023 | ඔබේ අංකය உமது இல Your No | | දිනය திகதி Date | 2024.02.28 |

WBB/Circular/No-03/2024

அனைத்து பிரதேச செயலாளர்கள்/பிரதி நலன்புரி நன்மை ஆணையாளர்கள்

**தேசிய அடையாள அட்டை இல்லாமல் வங்கிக் கணக்கு தொடங்கிய பயனாளியின் பிரச்சனைக்கு தீர்வுகளை வழங்குதல்.**

01. தேசிய அடையாள அட்டைகள் இல்லாத தகுதியுடைய பயனாளிகளுக்கு 6 மாதங்களுக்குள் தேசிய அடையாள அட்டையைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றில் கணக்குகளை ஆரம்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது. பின்னர் மேலும் இரண்டு மாத கால அவகாசம் நீட்டித்து வழங்கப்பட்டது . அந்தக் கால அவகாசமும் முடிவடைய உள்ளதால், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க பின்வரும் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

I. ஏற்கனவே தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்த அத்தகைய நபர்களின் பட்டியலைத் தயாரித்து, அதனை ஆட்கள் பதிவு ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி, முன்னுரிமை அடிப்படையில் அடையாள அட்டைகளை வழங்குவதற்காக எனக்கு அனுப்பவும்.

II. தேசிய அடையாள அட்டையின்றி வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து இதுவரை தேசிய அடையாள அட்டை பெற விண்ணப்பிக்காத பயனாளிகளின் தகவல்கள் கணினி மூலம் பெறப்பட்டு, அவ்வாறு திறக்கப்பட்ட வங்கிக் கணக்குகளை செயலிழக்கச் செய்து, அதற்குப் பதிலாக புதிய வங்கிக் கணக்கு தொடங்க பயனாளியின் குடும்பத்தின் வயது வந்த மற்றொரு உறுப்பினரின் பெயரில் அக் கணக்கைத் திறக்கவேண்டும். இதற்கு, விண்ணப்பித்த பயனாளியின் சம்மதம் பெறப்பட வேண்டும். அதற்கு இணைப்பு 1ல் கொடுக்கப்பட்டுள்ள மாதிரியின் வடிவில் கணினி மூலம் கடிதம் ஒன்றை தயாரித்து பூர்த்தி செய்து பிரதேச செயலாளரோ அல்லது பிரதேச செயலாளருக்குப் பதிலாக உதவி பிரதேச செயலாளரோ கையொப்பமிட்டு வங்கிக்கு அனுப்பவும். பின்னர் சம்பந்தப்பட்ட வங்கியில் இருந்து வங்கிக் கணக்கு விவரங்களைப் பெற்று, கணினி அமைப்பில் விவரங்களைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**02.** இதுவரை வங்கிக் கணக்கு தொடங்காத பயனாளிகள் வங்கிக் கணக்கு தொடங்கும் போது, விண்ணப்பதாரரிடம் தேசிய அடையாள அட்டை இல்லை என்றால், மற்றொரு வயது வந்த உறுப்பினரின் பெயரில் வங்கிக் கணக்கைத்

කාර්යාලය அலுவலகம் Office | Tel: 009411-2151481 009411-2484600/4117 Fax: 009411-2151482 | විද්‍යුත් තැපෑල மின்னஞ்சல் e-mail | welfarebenefitboard2016@gmail.com info@iwms.wbb.gov.lk | වෙබ් අඩවිය இணையத்தளம் Website | www.wbb.gov.lk

Scanned with CamScanner

தொடங்க இணைப்பு I மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி ஒரு கடிதத்தினை பிரதேச செயலாளரோ அல்லது அவருக்கு பதிலாக உதவி பிரதேச செயலாளரோ கையொப்பமிட்டு வழங்கலாம்.

03. வங்கிக் கணக்குகளின் விவரங்களை அந்தந்த வங்கியில் இருந்து பெற்று கணினி அமைப்பில் இற்றைப்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து எதிர் வரும் நாட்களில் உங்களுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

04. மேற்கூறிய நடவடிக்கைகளைப் பின்பற்றி, தேசிய அடையாள அட்டை இல்லாத பயனாளிகளின் பிரச்சினையை திட்டமிட்ட அணுகுமுறையில் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பம்:

ஜயந்த விஜேரத்ன

தலைவர்/ஆணையர்

சீனிவாசன் கிரிதரன்

மேலதிக ஆணையாளர் (தொடர்புகள் )

பிரதி:-

| | |
|---|---|
| செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.<br>ஆணையர் நாயகம் , ஆட்பதிவு திணைக்களம்.<br>அனைத்து மாவட்ட செயலாளர்கள்/மேலதிக நலன்புரி நன்மைகள் உதவி ஆணையர்கள். | அவசிய ஒருங்கிணைப்பு ஆதரவுக்காக |



Scanned with CamScanner

இணைப்பு I

…………………………………………………………வீட்டு அலகு எண்

அன்புள்ள ஐயா/ அம்மணி/ செல்வி

**அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்குதல் மற்றும் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல்,**
**வங்கிக் கணக்கு இல்லாத மற்றும் ஏற்கனவே உள்ள கணக்கின் செல்லுபடியை சரிபார்க்காத பயனாளிகள் (தேசிய அடையாள அட்டையுடன்)**

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் உதவித் திட்டத்தின் கீழ் முதற்கட்டத் தேர்வுப் பட்டியலின்படி நீங்கள் கொடுப்பனவு பெறத் தகுதியுடையவர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் இத் தகுதி பெற்றுள்ள பயனாளி தொடர்பான மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் என்பனவற்றை ஆய்வு செய்த பின்னர் சாத்தியமான திருத்தங்கள் உட்படுத்தப்பட்டுள்ளன . எனவே, உங்களின் நலன்புரி நன்மைகள் கொடுப்பனவினை நேரடியாக வழங்கிவைப்பதற்கு வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்படவேண்டும்.

எனவே உங்களது விருப்பத்திற்கேற்ப இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கி என்பனவற்றின் ஏதேனும் ஒரு வங்கிக் கிளையில் சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து கணக்கு வைத்திருப்பவரின் கணக்கு இலக்கம், கிளை மற்றும் கணக்கு வைத்திருப்பவரின் பெயர் ஆகியவற்றை உங்கள் பிரதேச செயலகத்திற்கு விரைவில் வழங்கவும். தபால் அலுவலகம் மூலம் வங்கிச் சேவையை மேற்கொள்வது உங்களுக்கு வசதியாக இருந்தால், தேசிய சேமிப்பு வங்கியில் அஞ்சல் அலுவலக சேமிப்புக் கணக்கைத் தொடங்கலாம் என்பதையும் நான் சுட்டிக்காட்டுகிறேன். இந்த வங்கிகள் ஆரம்ப வைப்பு இல்லாமல் கணக்கைத் திறக்க உங்களை அனுமதிக்கின்றன என்பதையும் நினைவில் வைத்திருக்கவும்.

மேலும், வங்கிப் பரிவர்த்தனைகள் மற்றும் கல்வியறிவு குறைபாடுகள் போன்றவற்றிற்காகச் செல்வதில் உங்களுக்கு ஏதேனும் சிரமங்கள் இருந்தால், உங்கள் குடும்பத்தில் உள்ள ஒருவருடன் கூட்டுக் கணக்கொன்றினை ஆரம்பித்துக்கொள்ளவும் முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

தங்கள் உண்மையுள்ள ,

ஒப்பம்:-

ஜயந்த விஜேரத்ன

தலைவர்/ ஆணையாளர்.

சீனிவாசன் கிரிதரன்

மேலதிக ஆணையாளர் (தொடர்புகள்)

Scanned with CamScanner

## வங்கிக் கணக்கு தொடங்குவதற்கு கணினி தரவு முறைமையில் பின்பற்ற வேண்டிய நடைமுறை.

**படி 01**

- வழங்கப்பட்ட கடவுச்சொற்களைப் பயன்படுத்தி கணினியை அணுகவும்.

**படி 02**

- கணக்கைத் திறக்கத் தேவையான பயனாளியை அவரவர்/அவளுடைய வீட்டு அலகு எண் (HH எண்கள்) அல்லது தேசிய அடையாள அட்டை எண்ணைப் பயன்படுத்திக் கண்டறிய வேண்டும்.

**படி 03**

- தற்போது வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் (தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள்) ஏற்கனவே உள்ள வங்கிக் கணக்கை செயலிழக்கச் செய்து புதிய கடிதத்தை வழங்க வேண்டும் மற்றும் வங்கிக் கணக்கு ஒன்றை வைத்திருக்காத பயனாளிகளுக்கு அதற்கான கடிதத்தை நேரடியாக வழங்க முடியும்.

**படி 04**

- இதன் பின்னர் பிரதேச செயலாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பத்தைப் பயன்படுத்தி பயனாளிக்கு கடிதத்தை வழங்கவேண்டும்.

Scanned with CamScanner

இணைப்பு *III*

## வங்கியிலிருந்து வங்கிக் கணக்கு விவரங்களைப் பெற்று அவற்றை கணினி தரவு முறைமையில் உள்ளிடுதல்

படி *01*

• பயனாளிகளால் திறக்கப்பட்ட வங்கிக் கணக்குகளை கணினி தரவு முறைமையில் உள்ளிடும்போது, இணைப்பு *II* இன் படி *01* மற்றும் *02* இன் படி உரிய பயனாளிகளைக் கண்டறிய வேண்டும்.

படி *02*

• வங்கிக் கணக்குகளைப் புதுப்பிக்கப் பயன்படும் கணினி தரவு முறைமை மூலம் கணக்குத் தகவலை மிகத் துல்லியமாக உள்ளிட முடியும். *(*இந்த வசதி தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது , விரைவில் வழங்கப்படும்*)*

பயனாளிகள் தொடங்கும் புதிய கணக்குகளின் விவரங்கள் நலன்புரி நன்மைகள் சபையிற்கு நேரடியாக வழங்கப்பட்டு வங்கி தகவல் முறைமையில் புதுப்பிக்கப்படும்.

எதிர்காலத்தில், இத்தகவல் பிரதேச செயலகத்தினால் கணினி தரவு முறைமையில் உள்ளிடப்பட வேண்டும் மற்றும் நலன்புரி நன்மைகள் சபையினால் உரிய வங்கித் தகவல்களைச் சரிபார்த்த பின்னர், அது கணினி தரவு முறைமையில் உள்ளிடப்படும்.

Scanned with CamScanner